பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 26 வெள்ளிக்கிழமை 12.11.2021 கதிர் 07

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் ஆச்சரியத்துக்குரிய முக்கிய விடயப் பொருளாகப் பேசப்பட்டது.

நாடாளுமன்ற பக்கம்02

# வடக்கு, கிழக்கு அபிவிருத்தி; இந்திய அரசு அதீத கரிசனை

## கூட்டமைப்புடன் தூதுவர் கொழும்பில் இரு மணித்தியாலங்கள் முக்கிய பேச்சு

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினருக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன் போது இந்திய மத்திய அரசின் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் தூதுவர் முக்கிய கவனம் செலுத்தினார். 2




## மேலும் 19 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 19 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள 11

## 715 பேருக்கு கொரோனா



இலங்கையில் நேற்று 715 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2

## ஒன்றுகூடல் ஒழுங்குவிதியில் திடீர் திருத்தம்

கொரோனா காலத்தில் பொது மக்கள் ஒன்றுகூடும்போது கடைப்பிடிக்க வேண்டிய தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் 2

## வடக்கில் 18 ஆயிரம் பேர் காணிகள் இன்றி தவிப்பு

### நாடாளுமன்றில் சிறிதரன் சுட்டிக்காட்டு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தில் பறிக்கப்படுகின்ற காணிகள் மீண்டும் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் வழங்கப்படாமல் இருக்கின்றன. இதன்காரணமாக தமது சொந்தக்காணிகளில் மக்கள் மீள்குடியேற முடியாது 2

## இலங்கை - இந்திய நட்புறவு சங்கத்தின் தலைவராக சமல்

கொழும்பு, நவ. 12

இலங்கை – இந்திய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடந்த கூட்டத்தில் இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2022 வரவு – செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்துக்கு



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் 2022ஆம் ஆண்டுக் கான வரவு – செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவு ள்ளது.

23 நாள் தொடர் விவாதத்தையடுத்து எதிர்வரும் டிசம்பா மாதம் 10ஆம் திகதி வரவு – செலவுத்திட்டம் தொடர்பான இறுதி வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, நிதி அமைச்சரால் வரவு செலவுத்திட்டம் மீதான உரை இன்று பிற்பகல் 2

## தமிழர் தாயகத்தில் தொடரும் காணி சுவீகரிப்பை நிறுத்துக!

### சபையில் கஜேந்திரகுமார் வலியுறுத்து



வடக்கு, கிழக்கில் தொடர்ந்தும் காணிகள் சட்டவிரோதமாகச் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையை அரசு உடன் நிறுத்த வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமா பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு, கிழக்கில் தனியார் காணிகள் உட்பட்ட 2

## தொடரும் சீரற்ற காலநிலை; 65,580 குடும்பங்கள் பாதிப்பு

### 1,390 வீடுகளுக்குச் சேதம்

நாட்டில் 17 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 65 அயிரத்து 580 குடும்பங்களைச் சேர்ந்த 2 இட்சத்து 30 ஆயிரத்து 185 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மாலை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம், மண்சரிவு மற்றும் மின்னல் தாக்கத்தால் இதுவரை 26 பேர் பலியாகியுள்ளனர். ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

ஆயிரத்து 390 வீடுகள் பகுதியளவும், 39 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்களில் 50 ஆயிரத்து 602 பேர் உறவினர்களின் வீடுகளிலும், 12 ஆயிரத்து 349 பேர் பாதுகாப்பான இடங்களிலும் தங்கியுள்ளனர்.

## 34 ஆயிரம் பேர் யாழில் பாதிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ள இடரால் 10 ஆயிரத்து 261 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 75 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 3.30 மணி வரையிலான மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு விவரங்களை யாழ்.மாவட்ட 2

## வவுனியாவில் நேற்று

## ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் 10 பேர் உட்பட 38 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 10 பேர் உட்பட 38 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர், தாமாக முன்வந்து பரிசோதனை செய்தோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில் வவுனியா மாவட்டத்தின் நான்கு சுகாதார 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வளாகத்தில் நடைபெற்ற இந்திய – இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் கூட்டம்தான் அது. வழமையாக வருடாந்தம் நடக்கும் கூட்டம்தானே,





அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கின்றது என்று நீங்கள் எழுப்பும் கேள்வி எனக்குப் புரிகின்றது. ஆனால் இம்முறைக் கூட்டத்தில் ஆச்சரியப்படும் விடயம் உண்மையில் இருந்தமைதான் விவகாரம்.

வழமையாக இத்தகைய கூட்டங்களுக்கு கட்சிக்கு ஓரிருவர் என்ற பெயரில் பத்துப் பதினைந்து எம்.பிக்கள்தான் வருவார்கள். அதில் ஓரிருவர் அமைச்சர்களாக இருப்பர்.

ஆனால் இம்முறை நூற்றுக்கும் அதிகமான எம்.பிக்கள் பிரச்சன்னமாகியிருந்தனர். எல்லாக் கட்சிகளினதும் மூத்த பிரதிநிதிகள், உறுப்பினர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள் தவறாது பிரசன்னம் கொடுத்திருந்தனர். நிலைமையை வாசகர்களுக்கு உணர்த்துவதற்காக நேற்றைய கூட்டத்தின் இருபடங்களையும் இணைத்துள்ளேன்.

“இத்துணை எம்.பிக்கள் ஒன்று திரண்டு வருவார்கள் என யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. அதுவும் வந்த பலரும் சிரேஷ்ட தலைவர்கள். இலங்கை விடயங்களில் இந்தியாவின் முக்கியத்துவத்துக்குக் கொழும்பு அரசியல்வாதிகள் விரும்பியோ – விரும்பாமலேயோ – கொடுக்கும் அங்கீகாரம் இது. தென்னிலங்கை அரசியல் காற்று சீனா பக்கத்தை விடுத்து, வடக்கு நோக்கி வீசத் தொடங்கி விட்டது என்பதற்கு, ஒரு கட்டியம் இது!” – என்றார் மூத்த அரசியல்வாதி ஒருவர்.

மேற்படி சங்கத்தின் தலைவராக இம்முறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார். சபாநாயகர், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்று முக்கிய பிரமுகர்கள் எல்லோரும் பிரஸண்ட்.

அதன் பின்னர் நேற்று மாலை இந்திய ஹவுஸில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியத் தூதுவர் அசோக் பாக்லேயைச் சந்தித்துப் உரையாடிய போது கூட, நேற்றுப் பகல், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்துக்கு நூற்றுக்கும் அதிகமான எம்.பிக்கள் முண்டியடித்துப் பிரசன்னமானமை முக்கிய விடயமாகப் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

‘சாகிறன், என்னை விடு’ – என்று துடிப்பவரை நாம் மறித்துப் பிடிக்க முடியாது. எப்படியும் செத்துத்தான் தொலைவார்.

அப்படித்தான் கூட்டமைப்பைச் சாகடிப்போம் என்று சிலர் – முக்கிய பதவிகளில் இருப்போர் – தற்குறிகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர் போலும். இத்தகையோரின் வழிகாட்டுதலில் இயங்கும் பரிதாப நிலைமையில் தமிழ்க் கூட்டமைப்பு.

இப்போது மாகாண சபைகள் செயற்படவில்லை. நாடாளுமன்றத்திலும் கூட்டமைப்பின் வலிமை பத்து உறுப்பினர்களாகக் குறைந்து விட்டது. அதற்கு அடுத்த மட்டம் உள்ளூராட்சி சபைகள்தாம்.

அந்த உள்ளூராட்சி சபைகளையும் – அவற்றின் தவிசாளர் பதவிகளையும் – கூட்டமைப்பு வரிசையாகப் பறிகொடுத்து வருகின்றது.

அண்மைக் காலத்தில் ஆறு உள்ளூராட்சி சபைகளை கூட்டமைப்பு கோட்டை விட்டுள்ளது. யாழ்.மாநகர சபை, நல்லூர், நெடுந்தீவு, காரைநகர், வல்வெட்டித்துறை, மன்னார் பிரதேச சபைகள் என்று இந்த வரிசை நீளுகின்றது.

யாழ்.மாநாகர சபையைப் பற்றி நான் பேசப்போவதில்லை. யாழ்.மாநகர முதல்வர் பதவியைக் கூட்டமைப்பு இழந்தமைக்கு யார் காரணம் என்பது அப்பட்டமான விடயம். எல்லோருக்கும் தெரியும்.

மற்றைய ஐந்தையும் பங்காளிக் கட்சியான ரெலோவிடம் கையாள விட்டு விட்டு, மூக்குடைபட்டுப் போயிருக்கின்றது கூட்டமைப்பு.

நான் அது பற்றி எல்லாம் விலாவாரியாக எழுதப்போவதில்லை. எழுத விடயங்கள், உள்சூக்குமங்கள் பல இருந்தும் எழுத விரும்பவில்லை. உண்மையை நான் எழுதப் போனால் கூட்டமைப்பு ஐக்கியத்துக்கு ஆப்பு வைக்கின்றேன் என்று என் மீதுதான் பாய்வார்கள் – தங்களைத் திருத்திக் கொள்ளாமல்.

ஆனால் ஒரேயொரு தகவலை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளராக இருந்த – கூட்டமைப்புப் பிரதிநிதி – அண்மையில் காலாமானார். அவர் ரெலோவைச் சேர்ந்தவர். எனவே அந்த இடத்துக்கு ஒருவரை நியமிக்க ரெலோவின் பரிந்துரையை தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா பார்த்திருந்தாராம்.

ரெலோ சார்பில் யாரை அந்த வெற்றிடத்துக்கு நியமிப்பது என்ற முடிவை தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவுக்குத் தெரியப்படுத்தியவர் யார் தெரியுமா? ரெலோவில் இருந்து பிரிந்து போய் ‘தமிழ்த் தேசியக் கட்சி’ என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியிருக்கும் ஸ்ரீகாந்தா – சிவாஜிலிங்கம் இணையில் ஒருவரான ஸ்ரீகாந்தாதான். அவருக்குத்தான் அந்த அதிகாரத்தை ரெலோ கொடுத்திருக்கின்றது, அதை மாவையர் அங்கீகரித்து ஏற்றிருக்கின்றார்.

வெற்றிடமாகிய காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் பதவிக்குக் கூட்டமைப்பு யாரை நியமிப்பது என்பதைத் தீர்மானிப்பவர் இப்போது கூட்டமைப்பிலோ, ரெலோவிலோ இல்லாதவர். இரண்டையும் முறித்துக் கொண்டு வெளியேறி, கூட்டமைப்புக்கு எதிராகத் தேர்தலில் நின்று – எதிரணிக் கூட்டணியில் முக்கிய இடம் பெற்று – கூட்டமைப்பை நார்நாராய்க் கிழித்து உதறும் மற்றைய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா.

அவர் (ஸ்ரீகாந்தர்) கொடுத்த பெயரை பக்குவமாய் ஏற்று இவர் (மாவையர்) நியமனம் வழங்கினார்.

அத்துடன் விடயம் முடிந்து விடவில்லை. காலியான உறுப்பினர் இடத்துக்கு ஒருவரை நியமித்தமையை அடுத்து, அந்தப் பிரதேச சபைத் தலைவர் தெரிவு விவகாரம். அது பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக – அந்தப் பதவியைத் தக்க வைப்பதற்கான தந்திரோபாயத்தை வகுப்பதற்காக – யாழ். மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் சில தினங்களுக்கு முன் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது.

அந்தக் கூட்டத்திற்கென தமிழரசு சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், பொருளாளர் கனகசபாபதி எல்லோரும் வந்து கலந்து கொண்டனர்.

ரெலோ வைத்திருந்த தவிசாளர் பதவியை எப்படித் தக்க வைத்துக் கொள்வது என்பது குறித்து ஆராயக் கூட்டப்பட்ட பங்காளிக் கட்சிகளின் அந்தக் கூட்டத்துக்கு ரெலோ அனுப்பிய பிரதிநிதிகள் யார் தெரியுமா?

முன்னர் ரெலோவில் இருந்த – இப்போது பிரிந்து போய் ரெலோவுக்கும், கூட்டமைப்புக்கும் எதிராக நீதியரசர் விக்னேஸ்வரன் அணியில் கூட்டமைத்துச் செயற்படும் – தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தாவும், செயலாளர் சிவாஜிலிங்கமும்தான்.

பிறகென்ன? எதிரிக் கூட்டணியுடன் கூட்டமைத்து மாவை வகுத்த தந்திரோபாயம் பிய்த்துக் கொண்டு போகாமல் என்னவாகும்?

குறைந்த பட்சம் ரெலோவிலிருந்து ஒரு தலைவராவது பிரசன்னமாகாத நிலையில் – முன்னாள் ரெலோவினரை ஏற்று – தந்திரம் வகுத்த மாவையின் தலைமைத்துவச் சீத்துவத்தை என்னவென்று சொல்வது?

இப்போது, ஆரம்பத்தில் நான், ‘சாகிறேன் என்னை விடு!’ – என்ற நிலைமையில் கூட்டமைப்பு இருப்பதாகக் குறிப்பிட்டமையில் தப்பு ஏதும் இல்லை என வாசகர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

– மின்னல் –

## ஆடைத் தொழிற்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்திய அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கியதாக வவுனியா, இராசேந்திரங்குளம் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் 10 பேர் உட்பட 38 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைச் சிகிச்சைக்காகத் தனிமைப்படுத்தவும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் கடந்த சில நாள்களாக கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

## 2022 வரவு - செலவுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஏற்றதன் பின்னர் முதலாவதாக முன்வைக்கப்படும் வரவு – செலவுத்திட்டமாக இது எனக் கருதப்படுவதுடன் இந்த அரசின் இரண்டாவது வரவு – செலவுத் திட்டமாகவும் இது கருப்படுகின்றது.

இன்றை வரவு – செலவுத்திட்டம் மீதான உரையின் பின்னர் எதிர்வரும் 13ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரை 7 நாள்களுக்கு வரவு – செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு இடம்பெறவுள்ளது. இரண்டாம் வாசிப்புக்காக வாக்கெடுப்பு எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதம் மற்றும் வரவு – செலவுத்திட்டம் மீதான மூன்றாம் வாசிப்பு எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாவதுடன் அன்றிலிருந்து எதிர்வரும் டிசம்பா மாதம் 10ஆம் திகதி வரையான 16 நாள்களுக்கு இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் டிசம்பா மாதம் 10ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

## வடக்கில் 18...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினா சி.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 14 ஆயிரம் போ காணிகள் இன்றி உள்ளனர்.

கிளிநொச்சியில் 4 ஆயிரம் பேர் காணிகள் இன்றி உள்ளனர் எனினும், முல்லைத்தீவில் சிங்கள மக்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இது ஓர் இனத்தை அழிப்பதற்கு எடுக்கப்படுகின்ற செயற்பாடுகளாகவே கருத வேண்டும் – என்றார்.

## 715 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 48 ஆயிரத்து 61 ஆக எகிறியுள்ளது.

அதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 272 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 22 ஆயிரத்து 789 ஆக அதிகரித்துள்ளது.

## ஒன்று கூடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தின் 2 மற்றும் 3 ஆம் பிரிவுகளின் கீழ் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இந்தத் திருத்தங்களை மேற்கொண்டுள்ளார்.

இதனடிப்படையில், பொதுமக்கள் ஒன்றுகூடல்கள் முறையான அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றே நடைபெற வேண்டும் என்று சுகாதார அமைச்சர் வெளியிட்ட ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றுகூடல்களுக்கு அனுமதி வழங்குதல், ஒன்றுகூட முடியுமானவர்களின் எண்ணிக்கை போன்றவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரமும் பொறுப்பான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த ஒழுங்குவிதிகளை மீறுவது சட்டப்படி குற்றமாகும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## தமிழர் தாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுக்காணிகளும் படையினராலும் சிங்கள மக்களாலும் அபகரிக்கப்படுகின்றன.

அண்மையில் கூட யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் 80 போச்சஸ் காணியும், மண்கும்பானில் 70 பேச்சர்ஸ் காணியும் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

கிழக்கில் மட்டக்களப்பு மயிலந்தனையில் தமிழர்கள் காணிகள், சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான வழக்கில் நீதிமன்றம் குறித்த அபகரிப்பாளாகளை வெளியேறக் கோரியபோதும் இன்னும் அது இடம்பெறவில்லை.

இதற்கிடையில் வவுனியா – நெடுங்கேணியில், கெப்பிட்டிக்கொல்லாவ மற்றும் பதவிய பகுதியில் இருந்து 1,030 குடும்பங்கள் குடியமாத்தப்பட்டுள்ளன.

இது அபிவிருத்தி என்ற போர்வையில் குடிப்பரம்பலை மாற்றும் செயற்பாடாகவே அமைந்துள்ளது.

இது தொடாபில் பேச்சு நடத்த, அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் நேரம் ஒதுக்கிக் கேட்டபோதும், சந்திப்புக்கு நேரம் தரப்பட்டு இறுதிநேரத்தில் அது இரத்துச்செய்யப்பட்டது – என்றார்.

## 34 ஆயிரம் பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டது.

அந்த அறிக்கையில், யாழ்ப்பாணத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக 86 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே இடம்பெயர்ந்தவர்கள் என்ற வகையிலே 5 தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வீடு முழுமையாக சேதம் அடைந்துள்ள நிலையில் 111 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன – என்றுள்ளது.

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் மாலை 5 மணி முதல் இரவு 7 மணிவரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அவரும், வெளிநாட்டுக்கான தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ள காரணத்தால் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரமும், உறவினரின் மரணவீட்டுக்குச் சென்ற காரணத்தால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கமும் நேற்றைய சந்திப்பில் பங்கேற்கவில்லை. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தியாவின் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், மாவட்ட ரீதியிலான தனித்தனியான துரித அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நீண்டகால அபிவிருத்தி நலத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்திய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட முக்கிய காரணிகள் குறித்தும் பேசப்பட்டன.

இந்திய – இலங்கை மக்களுக்கு இடையிலான தொடர்பாடல், இராமேஸ்வரம் படகு சேவை, பலாலி விமான நிலைய அபிவிருத்தி, காங்கேசன்துறை அபிவிருத்தி குறித்தும் முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்டது.

புதிய அரசமைப்பு தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டது.

# பாதுகாப்பும் ஜனநாயகமும் தமிழர்களுக்கு கிடையாது!

## சாணக்கியன் வேதனை



ஒரே நாட்டுக்குள் தீர்வு வேண்டும் என நாம் கேட்கின்றோம். எம்மைப் புறக்கணித்தால் நாம் வேறு எங்கு செல்வது? எனவே. ஜனாதிபதியிடம் நாம் எதனையும் எதிர்பார்க்க வில்லை. அவர் என்ன செய்வார் என்பது எமக்கும் தெரியும்.

ஜனநாயகத்தை பாதுகாக்க மாட்டார் என்பதும், சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க மாட்டார் என்பதெல்லாம் எமக்குத் தெரியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சபையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

நாட்டில் இன்று ஒருபுறம் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் தமது விவசாயத்தை ஏதேனும் ஒரு விதத்தில் முன்னெடுக்க முடியும். ஆனால், மக்களுக்கோ பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படப்போகின்றது. அடுத்த ஆண்டுக்குள் இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு நட்டஈடு கொடுத்துவிட்டு மக்களுக்கு ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டுக்கு எவ்வாறு தீர்வு கொடுப்பது? மக்களுக்கு ஒரு வேளை உணவு கிடைக்காவிட்டால் ஏற்படும் நிலை என்ன என்பது சகலருக்கும் தெரியும். அடுத்த ஒரு வாரத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும். இதனை எவரும் மறுக்க முடியாது.

இந்த நெருக்கடியில் கறுப்பு சந்தையின் தேவை அதிகரிக்கும். மக்களும் கறுப்புச் சந்தையை நாடும் நிலைமை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பாண்டியூரன் கவிதை நூல் வெளியீட்டு விழா




கவிஞர் பாண்டியூரன் மாஸ்டரின் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பாண்டிருப்பு மறுமலர்ச்சி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் இலக்கியவியலாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வரும் வரிசையில் கவிஞர் பாண்டியூரன் கவிதைகள் நூல் வடிவம் பெற்றுள்ளது.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மறுமலர்ச்சி சனசமூக நிலைய ஆலோசகரும் எழுத்தாளருமான உமா வரதராஜன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் நூல் வெளியீட்டை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் தமிழ் துறை தலைவர், தென்கிழக்குப் பல்கலைக் கழகம் பேராசிரியர் றமீஸ் ஏ அப்துல்லா, ஆலோசகர், மறுமலர்ச்சி சனசமூக நிலையம் டாக்டர் திருமதி புஸ்பலதா லோகநாதன், ஆலோசகர், மறுமலர்ச்சி சனசமூக நிலையம் சபா சபேன், பிரதிப் பதிப்பாளர் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சஞ்சீவி சிவகுமார், உபதலைவர் மறுமலர்ச்சி சனசமூக நிலையம் பா.செ.புவிராஜா, செயலாளர் மறுமலர்ச்சி சனசமூக நிலையம் சி.புனிதன், உபசெயலாளர் மறுமலர்ச்சி சனசமூக நிலையம் சிவவரதராஜன், கவிஞரின் குடும்ப உறுப்பினர் செல்வி நடேசன் கௌசிகா ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பை ஊடகவியலாளர் செல்லையா பேரின்பராஜா வழங்குவார்.

# கிழக்கு மாகாண ஆளுநர் ஜகம்பத்துக்கு எதிராக மட்டு. மாநகர சபை உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்

கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர் ஆகியோருக்கு எதிராக மட்டக்களப்பு மாநகர மேயர், பிரதி மேயர் உட்பட மாநகர சபை உறுப்பினர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநகர மேயர் தியாகராசா சரவணபவன் தலைமையில் கடந்த புதன்கிழமை கூடிய மாநகர சபை அமர்வை சில நிமிடங்களில் ஒத்திவைத்த மேயர் சபையிலிருந்து வெளியேறினார்.

அதன் பின்னர் ரி.எம்.வி.பி., ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சுயேச்சைக்குழு, ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் வெளியேறினர். பின்னர் பதாதைகளுடன் ஒன்றுதிரண்ட ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஆணையாளர் ஆகியோருக்கு எதிராக பதாதைகளை ஏந்தியவாறு சபா மண்டபத்தினுள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கிழக்கு மாகாண ஆளுநரின் பின்னணியில் இருந்து கொண்டு அரசுடன் இணைந்து மாநகர சபை நிர்வாகத்தில் தலையீடு செய்யும் மாநகர ஆணையாளர் மாநகர சபைச் சட்டத்தை மீறுவதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்வேறு கோஷங்கள் அடங்கிய பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். பின்னர் மாநகர சபை முன்றிலில் பதாதைகளுடன் மாநகர மேயரின் தலைமையில் ஒன்று திரண்ட மாநகர சபை உறுப்பினர்கள் பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



போராட்டத்தின் போது பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியிலுள்ள மட்டக்களப்பு மாநகர சபையிலுள்ள 38 உறுப்பினர்களில் 22 உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போதிலும் 16 பேர் எதிர்ப்பை வெளியிட்டு கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# விசேட குற்றப்பிரிவு காரியாலயத்துக்கு இந்திரகுமார் பிரசன்னாவிற்கு அழைப்பு

கிழக்கு மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் உப தலைவருமான இந்திரகுமார் பிரசன்னாவை விசாரணைக்கு உட்படுத்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இ.பிரசன்னா தெரிவித்துள்ளார்.

அவரது வீட்டுக்கு வருகை தந்த இரண்டு புலனாய்வுத்துறையினர் அவரிடம் வாக்குமூலம் பெற வேண்டும் என்பதற்காக அவரை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்தில் அமைந்துள்ள குற்றப்புலானாய்வு பிரிவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள், முகநூல் போராளிகள் போன்றவர்கள் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டும், அச்சுறுத்தும் நிலைமையும் மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய வெளிவிவகார அமைச்சர் நிதி அமைச்சர் பஸிலுடன் பேச்சு!

கொழும்பு, நவ. 12

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் பேசியுள்ளார்.

இதன்போது சிறப்பான ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டோம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் டுவிட் செய்துள்ளார்.

இரு தரப்பினரும் நெருக்கமாக செயற்படுவது தொடர்பாகப் பேசியுள்ளோம் என அந்த டுவிட்டர் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டாவுக்குப் பிறந்த ஞானம்!

கௌதம புத்தருக்கு ஞானம் பிறந்த மாதிரி நாட்டின் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் 'அரசியல் ஞானம்' பிறந்திருக்கின்றது போலும்.

இலங்கையின் அரசியலை ஒட்டி பொதுமக்களிடம் அவர் எழுப்பியிருக்கும் ஒரு கேள்வி திடீரென அவருக்கு 'அரசியல் ஞானம்' பிறந்து விட்டதோ என்ற சந்தேகத்தை நமக்குத் தந்து நிற்கின்றது.

பொதுமக்கள் தாம் ஒரு தடவை பொருத்தமற்றவர்கள் என்று அரசியலில் இருந்து துரத்தியவர்களை, ஏன் மீண்டும் பதவிக்குத் தெரிவு செய்கின்றார்கள் – புதிய முகங்களைத் தேடாமல்? – என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதி.

தற்போதைய எதிர்கட்சிகளின் நடத்தையை ஒட்டி இந்தக் கேள்வியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுப்பினாலும் கூட, இந்த முறைமைதான் – அரசியலில் துரத்தப்பட்டவர்களை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வரும் இந்தப் பண்பியல்புதான் – இலங்கை நாட்டின் சீரழிவுக்குப் பிரதான காரணம்.

நாட்டினதும், கட்சிகளினதும் தலைவர்கள் கதிரைகளைப் பற்றி பிடித்துக் கொண்டிருக்கும் இந்த அரசியல் முறைமைதான் நாட்டின் சாபக்கேடு.

"இந்த முறைமையை எப்படி மாற்றுவது என்பது எனக்குத் தெரியவில்லை, ஆனால் அது மாற்றப்பட்டேயாக வேண்டும்" – என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறுவது முற்றிலும் உண்மை.

"எதிர்க்கட்சிகள் ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்தன. அவற்றின் பெறுபேறுகள் திருப்தி தராமையால் மக்கள் எனது அரசைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் இப்போது இரண்டு ஆண்டுகளுக்குள் எதிரணியினர் நடந்து கொள்வதைப் பாருங்கள். ஏதோ தாங்கள் முன்னர் ஆட்சியில் – அதிகாரத்தில் – இருக்காதவர்கள் போலவும், புதியவர்கள் போலவும் அவர்கள் (எதிர்க்கட்சியினர்) பேசுகின்றனர்" – என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டுவதில் உண்மை இல்லாமல் இல்லை.

"எனவே உங்களின் எதிர்பார்ப்புகளை நானோ எனது அமைச்சர்களோ நிறைவு செய்யவில்லை என்றால் மீண்டும் அதே நபர்களைத் தெரிவு செய்யாதீர்கள். புதியவர்களைத் தேடுங்கள். அதற்கேற்ப முறைமைகள் மாற்றப்பட வேண்டும்.

"மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யாதோரை மீண்டும் மீண்டும் தெரிவு செய்வதில் பயனில்லை. ஆனால் இந்த முறைமையை யதார்த்தத்தில் எப்படி மாற்றுவது என்பது எனக்குத் தெரியவில்லை." – என்கிறார் ஜனாதிபதி கோட்டாபய.

"ஒரு தடவை எங்களைப் பதவியிலிருந்து துரத்திய பின்னர் திரும்பவும் ஏன் தெரிவு செய்கின்றீர்கள்? அதில் என்ன அர்த்தம் உள்ளது?" – என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

ஜனாதிபதி சுட்டிக்காட்டும் இந்தத் தவறுக்கு ஒருவகையில் பொதுமக்கள் காரணம் என்றாலும், எமது தேர்தல் முறைமைகளும் கூட இதற்கு அடிப்படைதான்.

மக்களைச் சந்திக்காமலேயே பல பத்தாண்டுகள் நாடாளுமன்ற அரசியல் செய்வதற்கு நமது சட்டத்தில் பல ஓட்டைகள் உண்டு.

லக்ஷ்மன் கதிர்காமர் நாடாளுமன்ற அரசியலில் கோலோச்சியவர். ஒரு முறைதன்னும் மக்கள் முன் தேர்தலுக்காக சென்றவரல்லர் அவர்.

1994 இலிருந்து சுமார் இருபத்தியைந்து ஆண்டுகள் எம்.பியாகவும், அமைச்சராகவும் நீடிக்கின்றார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். ஒரே ஒரு தடவை மட்டும் – அதுவும் 2000 முதல் 2001 வரை – சுமார் ஓராண்டுதான் கொழும்பு மாவட்ட மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக அவர் இருந்திருக்கின்றார். மற்றும்படி தேசியப் பட்டியல் மூலம் – பின் கதவு வழியில் – மக்களைச் சந்திக்காமல் நாடாளுமன்றப் பிரச்சன்னம் தான்.

'அரசியல் ஞானம்' பிறந்து ஜனாதிபதி கோட்டாபய உரைத்திருக்கும் இந்த உண்மையை – இந்தத் தவறை – நிவர்த்தி செய்வதாயின் மக்கள் மனதிலும் மாற்றம் வரவேண்டும். நம் தேர்தல் முறைமையிலும் மாற்றம் வரவேண்டும்.

# மக்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற திட்டத்தை கூட்டமைப்பு முன்னெடுக்காது

## சாணக்கியனின் செயலாளர் மேனன் திட்டவட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் மக்கள் நலன் சார்ந்த திட்டத்தையே முன்னெடுக்கும், மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த திட்டத்தையும் கூட்டமைப்பு முன்னெடுக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் உத்தியோக பூர்வ செயலாளர் மதிமேனன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனினால் சராவெளி பூலாக்காடு ஸ்ரீசித்திவிநாயகர்கோவிலுக்கு ஒலிபெருக்கிகள் வழங்கி வைக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மக்களின் கோரிக்கைக்கு அமைவாக இவை வழங்கி வைக்கப்பட்டன.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகத்தில் வைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் உத்தியோக பூர்வ செயலாளரும், இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் முகாமையாளருமான வி.மதிமேனனால் இவை வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் கருத்து வெளியிட்ட மதிமேனன் "பூலாக்காடு பிரதேசத்தில் பாலம் மிக அவசியமாக காணப்படுகின்றது. எனினும் தற்பொழுது அரசியல்வாதி ஒருவரின் தம்பி சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்டுள்ளார். இங்குள்ள வளங்கள் சுரண்டப்படுகின்றன. இங்குள்ள மக்களுக்கு பாலம் உட்பட பல தேவைகள் இருந்தும் அவை நிவர்த்தி செய்யப்படாமல் இங்குள்ள வளங்கள் சுரண்டப்படுகின்றமை கவலைக்குரியது.

எது எப்படி இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் மக்கள் நலன் சார்ந்த திட்டத்தையே முன்னெடுக்கும், மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தத் திட்டத்தினையும் கூட்டமைப்பு முன்னெடுக்காது.' எனக் குறிப்பிட்டார்.

# கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 272 பேர் குணமடைவு

கொரோனாவைரஸ்தொற்றில் இருந்து மேலும் 272 பேர் குணமடைந்து நேற்று (வியாழக்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 22 ஆயிரத்து 789 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 47 ஆயிரத்து 346 ஆக பதிவாகியுள்ளது..

மேலும் கொரோனாத் தொற்றால் நாட்டில் இதுவரையில் 13 ஆயிரத்து 908 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அத்துரலிய ரத்ன தேரர் உயர்நீதிமன்றத்தில் மனு



நாடாளுமன்றஉறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

'எமது மக்கள் சக்தி' கட்சி உறுப்புரிமையில் இருந்தும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் அவரை நீக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், கட்சியால் எடுக்கப்பட்ட குறித்த தீர்மானத்துக்கு எதிராகவே அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ரஞ்சன் ராமநாயக்க சேர்க்கப்பட்டார்

அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் கடந்த புதன்கிழமை கராப்பிட்டிய பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரி வித்தார்.

இந்த நிலையில், குறித்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் ராமநாயக்கவை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் எலும்பியல் பிரிவில் அனுமதிக்குமாறு பணித்துள்ளனர்.

இந்த நிலையில், அவர், நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021

"சுவர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."

- இரவீந்திரநாத் தாகூர்
(வங்கக் கவிஞர்)



காலைக்கதிர் Kalaikkathir

# தேசியப்பட்டியலில் 50 வீதம் பெண்களுக்கும் வேண்டும்!

## புதிய ஹெல உறுமய முன்மொழிவு

எதிர்வரும் தேர்தல்களின் போது தேசியப்பட்டியலில் 50 வீதம் பெண்களுக்கு வழங்கப்படுவதுடன், வேட்பாளர் பட்டியலில் 25 வீதம் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை புதிய ஹெல உறுமய கட்சி, தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவில் பரிந்துரைத்துள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும், தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழு அதன் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் கூடியபோதே புதிய ஹெல உறுமய இந்தப் பரிந்துரையை முன்வைத்தது.

புதிய ஹெல உறுமய கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி விசேட குழு முன்னிலையில் மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிடுகையில் –

போஸ்டர் பிரசாரங்கள் தொடர்ந்தும் நிறுத்தப்பட வேண்டும் என்றார். தேர்தல்களின் போது வேட்பாளர்கள் செலவு செய்யும் பணத்தின் அளவுக்கான வரையறையொன்றை ஏற்படுத்தல், தேர்தல் முடிவடைந்து மூன்று மாதங்களுக்குள் செலவுகள் தொடர்பான விவரங்களைப் பகிரங்கப்படுத்தல் மற்றும் நன்கொடைகளுக்கான மூலங்கள் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியை நியமிப்பதற்கான தடவைகள், தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், மதுர விதானகே, சாகர காரியவசம், குறித்த குழுவின் செயலாளரும் நாடாளுமன்ற பணியாள் தொகுதியின் பிரதானியும்,பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹண தீர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சீரற்ற வானிலை காரணமாக 630 பாடசாலைகள் மூடல்

நாடாளவிய ரீதியில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை காரணமாக 630 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் 444 பாடசாலைகளும், மேல் மாகாணத்தின் புத்தளம் கல்வி வலயத்தில் 37 பாடசாலைகளும், சிலாபம் மற்றும் கிரி உல்ல ஆகிய வலயத்தில் 11 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என மாகாணக் கல்வி இயக்குநர் ஜயலத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிரி உல்ல வலய கல்வி அலுவலகம் நீரில் மூழ்கியுள்ளதாகஅவர்குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மேல் மாகாணத்தில் களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் 15 பாடசாலைகளும் சப்ரகமுவ மாகாணத்தில் எலபொத்த பிரதேசத்தில் 5 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 105 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அனர்த்த நிலைமை காரணமாக பாடசாலைகளுக்கு எவ்விதப் பாதிப்புகளும் ஏற்படவில்லை.

வெள்ள நிலைமை காரணமாக மாத்திரமே பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என அந்த பிரதேச கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சர்ச்சையை ஏற்படுத்திய சீன சேதனப்பசளை தரமானதென 3 ஆம் தரப்பு நிறுவனம் சான்று

அண்மையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய சீன சேதனப் பசளை தரமானது என மூன்றாம் தரப்பு நிறுவனமொன்று அறிவித்துள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவிருந்த சேதன உரத்தில் தீங்கிழைக்கக் கூடிய பக்றீரியாக்கள் காணப்படுகின்றன எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இலங்கை தேசிய தாவர தடுப்பு காப்பு நிறுவனம் இந்த சீன சேதன உரத்தில் தீங்கிழைக்கும் பொருள்கள் காணப்படுகின்றன என பரிசோதனை செய்து அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து சீன நிறுவனத்திடமிருந்து உரம் இறக்குமதி செய்வது இடைநிறுத்தப்பட்டது.

எனினும், இந்த விவகாரம் தொடர்பாக சீன நிறுவனம் கடுமையான அதிருப்தி வெளியிட்டு வருவதுடன், ஏதாவது ஒரு வழியில் இலங்கைக்கு இந்த உரத்தை வழங்கிவிட வேண்டுமென்ற முனைப்புக்களை எடுத்து வருகின்றது.

நிறுவனமொன்றின் ஊடாக சீன நிறுவனம் தனது சேதன உர மாதிரியை பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டுள்ளது. இந்த பரிசோதனைகளின் போது குறித்த சேதன உரத்தில் எவ்வித தீங்கிழைக்கும் பக்றீரியாக்களும் கிடையாது என கண்டறியப்பட்டுள்ளது.

மூன்றாம் தரப்பு நிறுவனமான சூட்டர்ஸ் நிறுவனத்தின் பரிசோதனை முடிவு தொடர்பான அறிக்கையை சீன சேதன உர நிறுவனமான குயிங்டாவோ சீவின் பயோடெக் நிறுவனம் இலங்கைஊடகங்களுடன்பகிர்ந்துகொண்டுள்ளது.

ஐ.எஸ்.ஓ. தரத்தின் அடிப்படையில் இந்த பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதாகவும், சேதன உரம் தரமானது எனவும் சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே மேற்படி நிறுவனத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தி 80 லட்சம் அமெரிக்க டொலர்கள் நட்டஈடு கோரி தேசிய தாவர காப்பு தடுப்பு நிறுவனத்தின் மேலதிக பணிப்பாளர் ஒருவருக்கு நிபந்தனைக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. இதேவேளை, இந்த சேதன உர விவகாரம் தொடர்பாக சீனத் தூதுரகம் விவசாய அமைச்சுடன் பேச்சு நடத்தியுள்ளது, இதன் போது குறித்த சேதன உரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

## கிளிநொச்சி இரணைமடு திட்டத்தின் வாய்க்கால் இடிந்து விழுந்துள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தின் கீழ் இபாட் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் இடிந்து விழுந்துள்ளன. கிளிநொச்சி, இரணைமடு குளத்தில் இருந்து ஊரியான் பண்ணங்கண்டி ஆகிய பகுதி விவசாய நிலங்களுக்கான நீர்விநியோகம் செய்யும் வாய்க்காலின் கட்டுமானமே இவ்வாறு இடிந்து விழுந்துள்ளன.

கடந்த 2015 ஆம் ஆண்டு கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் அமைக்கப்பட்ட கட்டுமானமே இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது.

## கொவிட் தொற்றுக்கு இலக்காகும் சிறுவர்களின் எண்ணிக்கை உயர்வு



கொவிட் தொற்றுக்கு இலக்காகும் சிறுபிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உரிய சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது மிகவும் அவசியமானது என கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் நிபுணத்துவ மருத்துவர் சியாமென் ரஜின்தஜித் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபிள்ளைகள் மத்தியில் நோய்த் தொற்று பரவுகை அதிகரித்துச்செல்வது தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென சுகாதாரத் தரப்பினர் கோரியுள்ளனர்.

## விலையேற்றத்தைக் கண்டித்து புதுக்குடியிருப்பில் போராட்டம்

### தவிசாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிப்பு





நாட்டில் அதிகரித்துள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களும் பிரதேச அரசியல்வாதிகளும், பொதுமக்களும் இணைந்து கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் இருந்து குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினுடைய உறுப்பினர்கள் பல்வேறு பதாதைகளைத் தாங்கியவாறும், மாட்டு வண்டிலில் அதிகரித்த விலைக்குரிய பொருள்கள் சிலவற்றை ஏற்றியவாறும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டில் அதிகரித்துள்ள சமையல் எரிவாயு விலை, சீனி விலை, சீமெந்து விலை உள்ளிட்ட பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிராகவும், விவசாயிகளின் உரப்பிரச்சினைக்கு எதிராகவும் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'ஏற்றாதே எற்றாதே பொருள்களின் விலையை ஏற்றாதே, அடிக்காதே அடிக்காதே ஏழை வயிற்றில் அடிக்காதே, அடிக்காதே அடிக்காதே காசுகளை அடிக்காதே, விற்காதே விற்காதே நாட்டை விற்காதே' உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபை வரை பேரணியாகச் சென்றனர்.

பேரணியாகச் சென்றவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளரிடம் இந்த விடயம் தொடர்பில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 189

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**477. தீர்ப்பாயத்தின் தீர்ப்பு சர்வதேசத்திற்கு எதனை இடித்துரைத்தது?**

முக்கியமாக இந்த (தமிழ்) மக்களின் தனிப்பட்ட - அவர்கள் ஒரு கூட்டமாக வாழ்ந்து அனுபவித்த - உரிமைகள் மீறப்பட்டு, அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே அவர் களது இன்றைய வாழ்வுக்கும் எதிர்காலத்துக்கும் என்ன செய்ய விரும்



புகிறார்கள் என அவர்களே தீர்மானங்கள் எடுப்பதற்கான காலத்தையும் கடமைப்பாடுகளையும் ஏற்படுத்த வேண்டும் என அறிவுரை தந்தது.

**478. பரிகார நீதியாக எதனையும் அறிவுறுத்தியதா?**

பரிகார நீதிகளை அது அறிவுறுத்தத்தான் முடியும். சர்வதேச வல்லுநர்களின் அரசு கலப்பற்ற அபிப்பிராயங்களாகத்தான் அவை அமைய முடியுமே ஒழிய, அவற்றை அமுலாக்கக் கூடிய அதிகாரங்கள் அவர்களிடம் இல்லை என்பதையும் தொடக்கத்திலேயே தெரிவித்திருந்தேன். பரிகார நீதியாக சர்வதேசமும் ஐ.நாவும் மிகவும் விரைவாக ஒரு சர்வதேச விசாரணையை ஏற்படுத்தி, தொடரும் இனப்படுகொலையை நிறுத்தி, தமிழ் மக்கள் தங்களது எதிர்காலத்தை தாங்களே தீர்மானிக்க வழிவகைகள் செய்யவேண்டும் எனவும் அறிவுரை தந்தது. அதன் விளக்கம் ஐ.நா. நடந்தவற்றின் பின்னணிகளை ஆராய்ந்து, விசாரணைகளைச் செய்து, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து. அவர்கள் தங்களுக்காக என்ன எதிர்கால முடிவுகளை எடுக்க விரும்புகிறார்களோ அதற்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறினார்கள்.

**479. இன்று 12 வருடங்களாகியும் தமிழ் மக்கள் நீதிக்காக அலைகின்றார்களே?**

யதார்த்தமான உண்மை அது. இது தான் உணர்வுகளைப் பாதித்து மனவலி தரும் நிலை.

ஐ.நாவிடம் தமிழ் மக்களைப்போல் அழிவை எதிர்நோக்கிய மக்களை பாதுகாப்பதற்கான கடமைப்பாடுகளும் அதற்கான அதிகாரங்களும் பொறிமுறைகளும் இருந்தன. அவை இருந்தும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. கேள்விகள் ஐ.நாவின் உயர்மட்ட அதிகாரிகளினால் எழுப்பப்பட்டபோது ஐ.நாவின் "வழமையான" முறைகள் இவற்றில் ஏற்படுத்தப்பட்ட தீர்க்கமான முடிவுகளுக்கு வழி வகுத்தன என விளக்கம் தரப்பட்டது. ஆனாலும் இப்படியான தவறுகளிலிருந்து பாடம் கற்று, ஒருமுறையான பொறிமுறை ஐ.நாவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற உணர்வும், அது மீள ஏற்படக்கூடிய எந்த இனத்திற்கான அழிவையும் தடுக்கவேண்டும் என்பதற்கான வழிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் ஆராயப்பட்டன. இவற்றை ஜனாதிபதி ஒபாமா தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருந்தார். ஆனாலும் வேகம் ஆமைவேகத்தில் வழமையான முறைகளால் வளர்கிறது.

தீர்ப்பாயம் கூட தங்களது பரிந்துரையில், ஐ.நா. ஒரு மிகக் குறுகிய காலத்தில், நம்பத்தக்க முறையில், என்ன காரணங்களும் எந்த முறைகளும் நோர்வேயுடன் நடந்துகொண்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப் பட்டதற்கும் போர்வலயத்தில் இருந்த ஐ.நாவின் அதிகாரிகளும் அவர் களின் ஊழியர்களும் வெளியேறுவ தற்கு உத்தரவு தரப்பட்டமைக்கும் என்ன தொடர்புஎன்பவை பற்றி விசாரணையின் ஊடாக விளக்கங்கள் தரப்படவேண்டும் என்று கோரியது. ஆனால் இதுவரையில் ஐ.நாவினது கட்டமைப்பில் உள்ள சர்வதேச மனித உரிமை மன்று இவற்றை ஆராய்ந்து கொண்டு வருகிறது. அவ்வ



ளவே. அது சர்வதேசவல்லரசு அரசியலில் தான் ஏதாவது தெளிவு தர உருளும்.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் 2009 இன் பின்னர் பாதிக்கப்பட்டவர்களிலும் பார்க்க பரிகாரம் தேட புறப்பட்டவர்கள் பன்மடங்கு பெரிதாகியதால் எந்த கடவுளிடம் வேண்டுதல் செய்வது, பொங்கல் வைப்பது என்று விழி பிதுங்கி நிற்கிறார்கள்.

தமிழ் மக்கள் தமது எதிர்காலம் கருதி இப்படியாக நாட்டிலிருந்தும் புலம்பெயரிலிருந்தும் எட்டுத்திக்கும் பரிகாரம் தேடப் புறப்பட்டிருப்போரை தங்கள் சுயநலன்களைக் களைந்து, சரியான யதார்த்த நோக்கம் கொண்ட வழிக்கு அர்ப்பணிப்புடன், ஒருமித்த நிலைப்பாட்டில் செயல்பட கொண்டுவர வேண்டும். ஆயின் அவர்களது சுயநலன்களினாலேயே 70 ஆண்டுகளாக ஒவ்வொன்றையும் இழுத்து விழுத்தி, போர் முடிந்த இந்த 12 வருடகாலமும் கூட இதைத்தான் செய்தார்கள்.

போருக்குத் துணை நின்ற எல்லா நாடுகளுக்கும் - வல்லரசுகள் உட்பட - மஹிந்த ராஜபக்ஷதான் பயங்கரவாதத்தை அழித்தவுடன் பழைய குருடி கதவை திறப்பது என்ற மாதிரி சர்வக்கட்சி மாநாடுகள் கூட்டி, 13 ஆம் திருத்தத்துக்கு



மேலான தீர்வைத் தருவேன் என்றார். ஆனால் எந்த நாடும் அப்படியான தீர்வின் வரவை எழுத்தில் வாங்கி ஒப்பந்தம் செய்து போர்முடிவின் பின் அமுலாக்கம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யவில்லை.

போரின் உச்சக்கட்டமான ஆனந்தபுரச்சமருக்கு முன் நோர்வேயின் முன்னெடுப்பில் இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றியும் தீர்வின் முன்னோடி பற்றியும் மஹிந்த ராஜபக்ஷவோடு பேசுவதற்கு வெள்ளோட்டம் நடந்தபோது, அந்த அழைப்புக்கு சம்பந்தன் கூட்டமைப்பின் எல்லாத் தலைவர்களுடைய கையெழுத்துடன் அனுப்பிய பதிலின் பிரதியையும் இந்த தொடரில் முன்னர் பதிந்திருந்தேன். ஆனந்தபுரச் சமர் முடிந்து அவை முள்ளிவாய்க்காலில் இறுக, கூட்டமைப்பின் பல தலைவர்கள் வன்னிப் பரப்பில் இருந்து வெகுதூரத்தில் இருந்தார்கள். சிலர் இந்தியா சென்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டபின் தான் திரும்பினர். அந்த சாதுரியம், இடைவெளியில் வந்த தலைமையை அவர்கள் கையில் திணிக்க, பழைய பாணிகளில் அது ஏகோபித்த தலைமை என எண்ணினர். சிங்கள தலைமைகளுடன் பேசினார்கள். வழமையான இழுவைகள்தான். அவர்களுக்குக் கிடைத்தது.

**480. வல்லரசுகள் ராஜபக்ஷவை விழுத்தி, ரணிலைப் பிரதமராக்கி, மைத்திரியை ஜனாதிபதியாக கொண்டு வந்தனரே?**

இடையில் தமிழ் மக்களும் போரினை முன்னின்று நடத்திய இராணுவத் தளபதியை ஜனாதிபதியாக்க வாக்களித்தார்கள். பின் மைத்திரியை ஜனாதிபதியாக்கினர். அவர் நல்லாட்சி அமைக்கிறேன் என்று வாக்களித்தார். தமிழருக்கு தீர்வு என்பதில் தாங்கள் சிங்கள பெரும்பான்மையை எதிர்த்துப்போக முடியாது என்ற நிலைதான். மைத்திரியே நல்லாட்சி தருவார் என்று



வெற்றிலை வைத்து அழைத்தவர்கள் பயன்பெற்றதும் உண்டு. அவர்கள் மைத்திரி மிகப் பலமாகவும், ஆழமாகவும் மணல் ஆற்றுப் பகுதியில் சிங்கள மக்களை குடியேற்றுகிறார் என்பதையோ, தனது தொகுதியான பொலன்னறுவையிலி ருந்து 12,000 சிங்களக் குடும்பங்களை சம்பூர் பகுதிகளில் குடியேற்ற அத்திவாரம் போட்டார் என்பதையோ அடக்கி வாசித்தனர். அவர் பின் நடத்திய கோமாளித்தனங்களாலும் இப்பொழுது ஆப்பிலிருக்கும் ஈஸ்டர் காலப்படுகொலைகள் விசாரணைகளிலிருந்தும் நல்லாட்சியின் நோக்கங்களைப் புரிந்து கொள்ளலாம். ஆக இந்த மாற்றங்களெல்லாம் அமெரிக்காவாலோ மற்ற வல்லரசுகளாலோ தமிழ்மக்களுக்கு இவற்றில் தீர்வு அமைக்கப் படும் எனச் செய்யப்படவில்லை. ஸ்ரீலங் காவை சீனாவின் போக்குக்கு சாயவிடாமலேயே இவை ஏற்படுத்தப்பட்டன.

கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல் மஹிந்த ராஜபக்ஷ தனது சகோதரரோடு மூன்றில் இரண்டு பெரும்பான்



மையுடன் மீள வந்து இந்திய ஒப்பந்த அமுலாக்கம், 13 ஆம் திருத்தம் என்பவை பற்றி பேசாமல் "ஒரே நாடு ஒரே சட்டம்" என மக்களுக்கு சொன்னோம், அதை நடைமுறைப்படுத்துவோம் என முன்னேறுகிறார்கள்.

ஆக, தமிழர்களுக்கு வாக்குறுதி தந்து தீர்வை தரவில்லை என்று அமெரிக்காவின் ஆதங்கம் தனியாகவோ இந்தியாவுடன் இணைந்தோ எழுகிறதா? அது வல்ல என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அது தாங்கள் விடுதலைப் புலிகளை அழித்து ராஜபக்ஷக்களின் இனப்படுகொலையில் பங்கு தாரி களாகியும், அவர்களை சீன சார்பு நிலையில் இருந்து கட்டுப்படுத்தி அதிகாரம் மேற்கொள்ள முடியவில்லை என்பதே. ஆகவே அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் மனித உரிமை மீறல்களையும் இப்பொழுது கையிலெடுத்திருக்கின்றனர். ஆக, அவற்றின் ஊடாக இடைக்கால தீர்வோ நிரந்தரத் தீர்வோ என ஏதோ ஒன்றைப் பெற்று அதிலிருந்து முன்னேறவேண்டும். அதன் அத்திபாரங்கள் மைத்திரி - ரணில் மாதிரியான ஒதிய மரத்து உத்தரங்களில் ஆக முடியாது. அமைப்பு ரீதியாக நடைமுறைப்படுத்தப்படுபவையாக அமைய வேண்டும்.

(வளரும்.....)

# வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் இலங்கையர்கள் தபால் மூலம் வாக்களிக்க நடவடிக்கை எடுக்குக!

## சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து



வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு விரைவில் இரட்டைப் பிரஜாவுரிமையினை வழங்கி, தபால் மூலமாகவேனும் வாக்களிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) உரையாற்றிய போதே அரசாங்கத்திடம் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், 'அரசாங்கத்திடம் மிக முக்கியமான கோரிக்கை ஒன்றினை இந்த வேளையில் முன்வைக்க விரும்புகின்றேன்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் பலரும் இரட்டைப் பிரஜாவுரிமையினை பெற்றுக்கொள்வதில் ஆர்வமாகவே உள்ளனர். இரட்டைப் பிரஜாவுரிமையினை பெற்றுக்கொள்வது இலகுவாக இருந்தாலும், அதற்கான கட்டணத்தினை குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இலங்கையில் தற்போது டொலருக்கான பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்ற நிலையில், அரசாங்கம் இரட்டைப் பிரஜாவுரிமைக்கான கட்டணத்தினை குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள அமைச்சர் உள்ள நாட்டில், வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் பலரும் இரட்டைப் பிரஜாவுரிமையினை பெற்றுக்கொள்வதில் ஆர்வமாகவே உள்ளனர்.

எனவே அவர்களுக்கு விரைவாக இரட்டைப் பிரஜாவுரிமையினை வழங்கி, வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

குறிப்பாக தபால் மூலமாகவேனும் அவர்கள் வாக்களிப்பதற்கு தேவையான நடவடிக்கையினை அரசாங்கம் செய்ய வேண்டும். இதுகுறித்து அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தும் என நம்புகின்றேன்' – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு. மாநகர ஆணையருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளருக்கு எதிராக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வரால் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் 06 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாநகரசபையால் ஆணையாளருக்கு வழங்கப்பட்டு மீளப்பெறப்பட்ட அதிகாரங்களில் மாநகர ஆணையாளர் தலையீடுசெய்வதை தடுக்கக்கோரி மாநகர முதல்வரால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கு தொடர்பான விசாரணை நேற்று(வியாழக்கிழமை) மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம். அப்துல்லா தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், மாநகரசபையின் ஆணையாளர் மா.தயாபரன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். இதன்போது குறித்த வழக்கு தொடர்பாக மேலதிகமாக வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முதல் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் எதிர்வரும் டிசெம்பர் 06ஆம் திகதி வரையில் வழக்கை ஒத்திவைக்கிறேன் என உத்தர விட்டார்.

# அரசின் செயற்பாட்டுக்கெதிராக வவுனியாவில் சுவரொட்டிகள்!



வவுனியாவில் பல்வேறு இடங்களில் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு எதிராகத் தமிழ்சிங்களத்தில் எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டிகளில் மின்சாரம் எண்ணைய் சுயாதீபத்தியத்தை காட்டிக்கொடுக்கும் திருட்டு ஒப்பந்தத்தை ரத்துச் செய், அமெரிக்க – சீன – இந்திய மரணப்பொறியில் மக்களை சிக்க வைக்கும் ஏகாதிபத்திய சார்பு ஆட்சிக்கு எதிராவோம். போன்ற வாசகங்கள் காட்சிப் படுத்தப்பட்ட சுவரொட்டிகளுக்கு தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சி என்பன உரிமை கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# பூஸ்டர் தடுப்பூசி பெற்றவர்கள் 90 ஆயிரத்தை அண்மிக்கின்றது

இலங்கையில் மூன்றாம் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆயிரத்தை அண்மித்துள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் மூன்றாம் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 89 ஆயிரத்து 97 ஆக அதிகரித்துள்ளது.

அதேநேரம், நாட்டில் கடந்த புதன்கிழமை மாத்திரம் 30 ஆயிரத்து 20 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, ஆயிரத்து 767 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸும் ஆயிரத்து 461 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், 9 ஆயிரத்து 639 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் மூன்றாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் 10 ஆயிரத்து 403 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸும் 676 பேருக்கு தடுப்பூசியின் 2 ஆவது டோஸும் செலுத்தப்பட்டன.

56 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸும் 18 பேருக்கு தடுப்பூசியின் 2 ஆவது டோஸும் செலுத்தப்பட்டதாகத் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

# சிரியாவில் பயிற்சி பெற்றவர்கள் எவரும் ஈஸ்டர் தாக்குதலில் பங்குபற்றவில்லை

## ரணில் தெரிவிப்பு



ஈஸ்டர் தாக்குதலில் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயிற்சி பெற்ற முஸ்லிம் இளைஞர்கள் எவரும் பங்குபற்ற வில்லை என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (வியாழக்கிழமை) உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நான் இங்கு ஒன்றைக் கூற வேண்டும். சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ். பயங்கரவாதப் பயிற்சிப் பெற்ற எந்தவொரு நபராலும் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விடயத்தை யாரும் அரசியல்மயப்படுத்தக்கூடாது. விசாரணை அறிக்கைகளை ஏன் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கவில்லை என்பதுவே எமது கேள்வியாகும்.

சாதாரணமாக எந்தவொரு ஆணைக்குழுவில் விசாரணைகள் நடக்கும்போதும் சாட்சிகளின் வாக்கு மூலம் உள்ளிட்டவற்றின் அறிக்கைகளை வெளிப்படுத்திக்கொண்டுதான் வருகிறோம்.

இவற்றை சபையில் இருந்து மறைக்க முடியாது. அவ்வாறு விசாரணைகளை மறைப்பது எமது வரப்பிரசாதங்களை மீறும்செயற்பாடாகும்.

தாக்குதல் இடம்பெற்ற உடனேயே, பொலிஸாரும் சி.ஐ.டியினரும் இணைந்துதான் பொறளை உள்ளிட்ட பகுதிகளில் பதுங்கியிருந்த சூத்திரதாரிகளை கைது செய்தார்கள். மாறாக புலனாய்வுப் பிரிவினர் அல்ல என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் இன்று மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வவுனியாவில் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று(வெள்ளிக்கிழமை) காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா மாவட்டத்தில் குருக்கள் புதுக்குளம், மணியர் குளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலனாய்வுப் பிரிவு எவரையும் சஹ்ரான் சந்திக்கவில்லையாம்

## சரத் வீரசேகர கூறுகின்றார்



ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான், புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த எவரையும் சந்திக்கவில்லை என்பது ஆதாரங்களின்படி தெரியவந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் விசேட அறிக்கையொன்றை விடுத்த அமைச்சர் –

ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் சஹ்ரானின் மனைவி விசாரிக்கப்பட்டார் எனவும், தனது கணவர் புலனாய்வு அதிகாரிகளை சந்தித்தார் என அவர் ஒருபோதும் குறிப்பிடவில்லை எனவும் தெரிவித்தார்.

தான் ஆதாரங்களின் பதிவுகளை ஆய்வு செய்தேன் எனவும் அவருடைய கணவர் உளவுத்துறை அதிகாரிகளை சந்தித்தமை பற்றி எந்த ஆவணங்களும் வெளிப்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சஹ்ரானுக்கு புலனாய்வுப் பிரிவுகளுடன் அல்லது பாதுகாப்புப் படையினருடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

# பேரழிவு காலத்திலும் கொடுங்கோல் அரசு பிக்பாக்கெட் அடித்துக்கொண்டிருக்கிறது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சாடல்



இந்த பேரழிவு தருணத்திலும் தற்போதைய கொடுங்கோல் அரசாங்கம் பிக்பாக்கெட் அடித்துக் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். நாட்டின் கொடிவினையின் அடையாளமாக மாறிய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து,பொது மக்களுடன் இணைந்து இந்த நாட்டில் மக்கள் சார்பான, மக்கள் அரசாங்கத்தை உருவாக்குவதற்கான போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கடுவலை தொகுதி அமைப்பாளர் ஹிருணிகா பிரேமசந்திரவின் ஏற்பாட்டில் அரசாங்கத்துக்கு எதிரான பாரிய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தற்போதைய அரசாங்கத்தின் கீழ், புவிசார் அரசியலில் செல்வாக்கு மிக்க நாடுகளின் சூதாட்ட களமாக இலங்கை மாறியுள்ளதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அன்று தேசிய பாதுகாப்பு குறித்து கூச்சலிட்ட அரசாங்கம் தற்போது இது தொடர்பில் சிறுதளவேனும் செவி சாய்க்காதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களுக்காக உங்களை அர்ப்பணிக்க முடியுமாக இருந்தால் – மக்களின் குறைகளை உணர முடியுமாக இருந்தால் – நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உண்மையான விருப்பம் இருந்தால் – அப்படிப்பட்ட அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் திறந்திருக்கின்றன என எதிர்க்கட்சித் தலைவர் கூறி னார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மனிதாபிமானமும் உணர்வும் கொண்ட நாட்டை உருவாக்கத் தமக்கு வாக்களிக்குமாறு நாட்டு மக்களைத் தான் கேட்டுக் கொண்டேன் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஆனால் அன்று வெற்று வீரத்துக்காக பலர் வாக்களித்தனர் எனவும்,அதன் விளைவை இன்று நாடு முழுவதும் அனுபவிக்க வேண்டி நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இன்று முழு நாட்டுக்கும் தேவை மனிதாபிமானமும் உணர்வுபூர்வமான அரசாங்கமும் தான் எனக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர்,அதற்கான உத்தரவாதம் அரசியலுக்குப் பதிலாக தேசத்துக்கான சேவையை வழங்கும் ஐக்கிய மக்கள் சக்தியே என்றும் அவர் கூறினார்.

# திடீர் மாரடைப்பால் உயிரிழந்த ஆசிரியைக்கு இன்று வடமாகாண பாடசாலைகளில் அஞ்சலி

அதிபர் – ஆசிரியர் சம்பள முரண்பாடு தீர்வினை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு இருந்த வேளை திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்த ஆசிரியைக்கு இன்று வட மாகாண பாடசாலைகளில் அஞ்சலி செலுத்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஊடக சந்திப்பிலேயே இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

அண்மையில் அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாடு தீர்வினை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு இருந்த வேளை திடீர் மாரடைப்பு காரணமாக மாத்தறை தெனியாய மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பாடசாலை ஆசிரியரான வருணி அசங்கா அகாலமரணமடைந்தார்.



அவரின் அர்ப்பணிப்புக்கு மதிப்பளித்து அஞ்சலி செலுத்தும் முகமாக நாளை வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் காலையில் 5 நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தி ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்குமாறே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# யானை திருட்டு அலை; வெளிப்படுத்தினார் சஜித்

உடவலவை தேசிய பூங்காவில் சட்டவிரோதமான முறையில் காட்டு யானையொன்றை பிடித்து கொண்டு செல்ல முற்பட்ட முயற்சி தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

காட்டு யானை திருடும் முயற்சியைத் தடுத்ததற்காக, துணிச்சலான வனப்பூங்காக் காப்பாளர்கள்,வனஜீவராசிகள் உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை இராணுவ வீரர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், யானை திருட்டு அலை ஒன்று வீசத் தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரஹர கலாசாரத்தைப் பாதுகாக்க,அடக்கமான யானைகளின் இனப்பெருக்கத்துக்கு அனுசரணை வழங்கப்பட வேண்டுமென தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அதைத் தாண்டி நடத்தப்படும் யானைக்கடத்தலுக்கு எதிராக செயற்படும் அதிகாரிகளுக்கு அவர்களின் கடமைகளை நிறைவேற்ற கடுமையான சட்டங்களும் ஒத்துழைப்புகளும் தேவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை;

# வியாழேந்திரன் உட்பட 5 பேருக்கு எதிரான வழக்கு நீதிமன்றால் மார்கழி மாதத்துக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகங்களை இந்துமயானத்தில் புதைத்ததற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட 5 பேருக்கு எதிராக மட்டக்களப்பு பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் மார்கழி மாதம் 14 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், இணைப்புச்செயலாளர் யோ.ரொஸ்மன், இளைஞர் ஒருங்கிணைப்பாளர் அனோஜன்,மாநகர சபை உறுப்பினர்களான செல்வி மனோகரன் மற்றும் அருள்தாஸ் சுசிகலா ஆகியோருக்கு எதிராக மட்டக்களப்பு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.ரிஸ்வான் முன்னிலையில் நடைபெற்றது.

மேற்படி வழக்கு விசாரணையில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொள்ளவில்லை. இதன்போது இந்த வழக்கில் தொடர்புடைய மாநகர சபை உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மகளிர் அணி தலைவியுமான செல்வி மனோகரன் உயிரிழந்துள்ள நிலையில், அவரது மரண சான்றிதழை எதிர்வரும் மார்கழி மாதம் 14 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என மட்டக்களப்பு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்தோடு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வழக்கிற்கு வருகை தராதமைக்கான ஆவணங்களுடன், அடுத்த வழக்கு தவணை அன்று கட்டாயம் வருகை தருவதோடு ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கடந்த 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடியைச் சேர்ந்த தற்கொலை குண்டுதாரியான ஆசாத்தின் உடற்பாகத்தை கள்ளியன்காடு இந்து மயானத்தில் பொலிஸார் புதைத்தனர்.

இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தமை தொடர்பாக குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். போதனாவில் குருதித்தட்டுப்பாடு

நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியவில்லை என யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அறிவித்துள்ளது.

அது தொடர்பில் அவர்கள் குறிப்பிடுகையில் –

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த குருதியின் அளவு 330 பைண்ட் ஆகும்.

ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவோ 200 பைண்ட் ஆகும். இதனால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இரத்த வங்கி காணப்படுகின்றது.

இருக்கின்ற குருதியும் இன்னும் 5 நாள்களுக்கு மட்டுமே போதும். அதன் பின்பு ஏற்படுகின்ற அனர்த்தங்களுக்கோ அல்லது விபத்துக்களுக்கோ, சத்திர சிகிச்சைகளுக்கோ, மகப்பேற்று சத்திர சிகிச்சைகளுக்கோ, குருதிச்சோகை நோயாளர்களுக்கோ மற்றும் ஏனைய நோயாளர்களுக்கோ குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலைக்கு இரத்த வங்கி தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் முதலில் வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் மருத்துவ பீட மாணவர்களின் ஒத்துழைப்பு பெறப்படுவது வழமையாகும்.

ஆனால் தற்போது சுகாதாரத் துறை சார்ந்தவர்களுக்கு கொவிட் -19 இற்கான மேலதிக தடுப்பூசியாக பைஸர் போட்டுக்கொண்டிருப்பதால் ஒரு கிழமைக்கு அவர்களிடமிருந்து குருதியைப் பெற முடியாத நிலையிலுள்ளோம்.

ஏனைய இரத்த வங்கிகளிடமிருந்தும் குருதியைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. எமது இரத்த வங்கியின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வழமை போன்று குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைப்பாளர்களின் ஒத்துழைப்பைக் கோரிய போதும் கொரோனா நோய் நிலைமை காரணமாகவும் மற்றும் விரதங்கள் காரணமாகவும் இரத்ததான முகாம்கள் ஒழுங்கு செய்ய முடியவில்லை.

அத்துடன் தினமும் அதிகளவான குருதிக்கொடையாளர்களை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு கேட்கின்ற போதும் அதில் 10 - 15 குருதிக் கொடையாளர்களே இரத்ததானம் செய்கின்றார்கள்.

இது போதாது ஏனென்றால் தினமும் எமது இரத்த வங்கியால் 30 - 35 பைண்ட் குருதி விநியோகிக்கப்படுகின்றது.

ஆகவே தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த ஆபத்தான நிலையை உடனடியாகத் தவிர்ப்பதற்கு வட மாகாணத்திலுள்ள இளைஞர் யுவதிகள் இரத்ததானம் செய்ய வதற்கு முன்வர வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள உங்கள் உறவுகள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

இரத்ததானம் செய்வது தொடர்பாக 0212223063, 0772105375 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம் என இரத்த வங்கி அறிவித்துள்ளது.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## மகிழ்ச்சி





ஒரு சிறிய கிராமத்தில் ஒரு பாழடைந்த கோயிலருகில் பூத்துக்குலுங்கிக் காய்த்துக் கனிந்த மரமொன்று பல காலமாக செழித்து நின்றது.

அந்தக் கோயிலருகில் மனிதர்கள் நடமாட்டம் என்பதே மிகக் குறைவாகத் தான் இருந்தது.

ஆனால் அங்கே பறவைகளும் மிருகங்களும் கூடியாடிப் பாடிப் பழகின. அப்படியொரு சூழலிலே அந்த மரத்தின் பொந்தில் வாழ்ந்த கிளியும் மரத்திலிருந்து விழும் பழத்தை உண்ண வந்து போகும் குரங்கும் நண்பர்களாகின.

இப்படியே நாளும் பொழுதும் அவர்கள் நட்பு தொடர்ந்தது. மரத்திலிருந்து பழங்களை கொத்தி தின்னும் கிளி அதில் சிலவற்றை குரங்குக்கும் எடுத்து வைத்து கொடுத்து உண்டு மகிழ்ந்தது. ஒரு நாள் திடீரென பலத்த காற்றுடன் மழை வந்தது.

அதனால் பல காலம் நீண்டுவாழ்ந்த அந்த மரம் பாறி வீழ்ந்தது. பலரது பசிக்கு விருந்தளித்த மரம் பாறி விழுந்ததால் கிளியும் அதன் உறவுகளும் நிலை குலைந்து மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தன.

அப்போது பழம் பொறுக்கி தின்ன வரும் கிளியின் நண்பனான குரங்கு அங்கே வந்தது. வந்து பார்த்து, கிளியின் நிலைகண்டு பதறியது. பதறிய குரங்கு தனது நண்பனையும் உறவுகளையும் அழைத்துக்கொண்டே தான் வாழும் இடத்தில் தங்க வைத்து மகிழ்ந்தது. வாய் பேசாத பறவை, மிருகம் அன்போடு வாழ்கிறது.

நாமும் அன்பே கடவுளாக அன்பு செய்து வாழ்வோம்.

**- தேவராசா விஜிதா**
**(ஆரம்பக்கல்வி A ,2020-2021 பிரிவு, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**

## பாதஹஸ்தாசனம்

வாரம் ஓர் ஆசனம்



**செய்முறை :**

உடல் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு (தடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)

மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள்மட்டத்திற்கு மேல் உயர்த்தவும். உள்ளங்கைகள் தரையை நோக்கியதாக இருக்க வேண்டும். பின்னர், கைகள் இரண்டையும் தலைக்கு மேல் உயர்த்தி புயங்களை இரு காதுகளுடன் சேர்த்தவாறு வைக்கவும்.

மூச்சைவெளிவிட்டவாறு உடம்பை கிடை மட்டமாக தரைக்கு இணையாக முன்னோக்கி வளைக்கவும். மேலும் மூச்சை வெளிவிட்ட வண்ணம் உடம்பை கீழ் நோக்கி வளைத்துகைவிரல்கள்பாதங்களுக்கு கீழ் வைக்கவும். தலையானது இரு கைகளுக்கு இடையில் தளர்வாக இருக்க வேண்டும். இந்த நிலையில் சாதாரண சுவாசம் கொள்க.

இதன் உச்சநிலையாக நெற்றியானது முழங்கால்களைத் தொட்டிருக்க, உள்ளங்கைகளை பாதங்களுக்கு கீழே வைக்கவும். இந்த நிலையில் சாதாரணமாக சுவாசித்த வண்ணம் இருக்கவும். (இந்நிலையில் கைகளை மடிக்கலாம். கால்களை மடிக்கலாகாது.)

பின்னர் மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு தலையைக் கைகளோடு சேர்த்தவாறு முதுகெலும்பின் அடிப்பகுதியிலிருந்து தரைக்கு இணையாக உயர்த்தி தொடர்ந்து மூச்சை உள்ளிழுத்தவாறு நிமிர்ந்து நேரான நிலைக்கு வரவும்.

மூச்சை வெளிவிட்டுக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள்களுக்கு இணையாக இறக்கி பின்னர் ஆரம்ப நிலைக்கு கொண்டு வரவும்.

**பயன்கள் :**

உடம்பின் பின்புறம் உள்ள எல்லா தசைகள், தசை நார்கள், இடுப்பெலும்புகள், மூட்டுகள், தொடை எலும்பு, கால் நரம்புகள் நன்றாக நீட்டப்படுகின்றன. முதுகுத் தண்டுவடம், இடுப்பு எலும்புகள் இறுக்கத்தன்மை குறைந்து முறுக்கேறும். தலைப்பகுதிக்கு ரத்த ஓட்டம் அதிகரிக்கும். ஜீரண உறுப்புக்கள் மற்றும் நாளமில்லாச் சுரப்பிகள் நன்கு வேலை செய்கின்றன. இடுப்பு பகுதியில் அதிகமாகக் காணப்படும் ஊளைச்சதைகள் மற்றும் தேவையற்ற கொழுப்புக்கள் குறைவடைகின்றன. இரைப்பை, பித்தப்பை கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றின் இயக்கம் அதிகரித்து ஜீரண சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. கல்லீரல் அழற்சி, மலச்சிக்கல், நீரிழிவு முதலிய கோளாறுகள் நீங்கும். மூட்டு வலி, நாரி வலி, கழுத்து வலி நீங்கும். பெண்களுக்கான கர்ப்பப்பை மற்றும் சூலகம், சூலக குழாய்களது இயக்கத்தை மேம்படுத்துகிறது. பியூட்றிதைறொயிட் மற்றும் பராதைறொயிட் சுரப்பிகளின் செயற்றிறனை அதிகரிக்கச் செய்து அவை சார்ந்த நோய்களை இல்லாமற் செய்கிறது.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

## நல்லைக் கந்தன் கழங்கோர் கவிமாலை



தனதனன தனதனன தனதனன தனதனன
தனதனன தனதனன -தனதான
உதரகம லமதிலுதி புதியபுவ னமதுபடை
பிரமனுறு செருவையழி – பெருவேலா
உவகையொடு மகளிரறு வரதுமுலை யமுதுபெறு
அறுமுகன தெனவுமுரை – வடிவேலா
அதிமதுர குறுமுனிவ னுனதுதிரு வடிபணிய
அரியதமி ழுதனையளி – புலவோனே
அறிவுமறி வதனிலுள செறியுபல னெறிமுறையும்
அடியவனு மறியறிவு – அருளாயோ?
அதிரநடை புரியவரு விடையதனி லமருசிவ
னறியசெவி பொருளையுரை – குருநாதா
அகிலமது துயரமற யசுரகிளை யவைகளற
அமருமெழ கிருபைபுரி – குமரோனே
இதமதிக அவரைபொரி பயறினொடு துவரையவ
லமுதுசெயு கரிமுகவ – னிளையோனே
இனிமைதரு முனதடிய ரிசைவுபெற முருகனென
எழிலுறுநல் லையினிலுறை – பெருமானே

**- கவிஞர் குகதாசன் -**

## அடக்கமுடைமை –11



பொதுவாகத் திருக்குறள் அடக்கமுடைமையையும் அதன் பயனையும் முதல் நான்கு குறள்களில் வகுத்து கூறுகின்றது.

அடுத்து மற்றவர்களிடத்தில் பணிவாக நடந்து கொள்ள வேண்டிய பண்பை எடுத்துக் கூறுகிறது. செல்வமுடைமை அகந்தையை வளர்க்கும். ஆதலால், செல்வம் உடையார் பணிவுடையாராகவும் இருப்பின் இரண்டு மடங்கு செல்வம் பெற்றமை போன்றது என்பது திருக்குறள் கருத்து.

அடுத்து, ஐம்பொறிகள், ஐம்புலன்களின் அடக்கத்தை எடுத்துக் கூறுகிறது. அடக்கமுடைமை என்ற பண்பின் தோற்றத்திற்குரிய ஒழுகலாற்றை எடுத்துக் காட்டுகிறது. புலன்கள், ஆசைகள் தோன்றும் களம். ஆசைகள் தோன்றி வளர்ந்தால் அடக்கமுடைமையைப் பெறுதல் இயலாது. புலன்களில் ஆசைகள் தலைப்படின் அந்த ஆசைகளை அடையப் பொறிகளை இயக்கும் ஆன்மா, அப்போது பொறிகள் மதம் பிடித்தக் களிறுகளைப்போல் கட்டுப்பாடின்றிச் செயற்படும். இது தவறு. பெரும்பாலும் இச்சை, பொறி வாயிலாகச் செய்திகளாக, பொருள்களாகப் புலன்களுக்குச் செல்லும். புலன்கள், தாம் பொறி வாயிலாகப் பெற்ற செய்திகளை, பொருள்களை இச்சையாக மாற்றி மீண்டும் பொறிகளைத் தூண்டும் – அவற்றை அடைந்து அனுபவிப்பதற்காக! ஆதலால், பொறிகளை கண்டபடி சுற்றவிடாமல் பாதுகாத்தால் பொறியடக்கம், புலனடக்கம் இரண்டும் ஒருங்கே வந்திணையும்.

இந்த உயரிய ஒழுகலாறு அமைய வேண்டுமானால் அழகுடையான எல்லாம் ஆராதனைக்கே உரியன, அனுபவிப்பதற்கு அல்ல என்ற கருத்தும் நல்லனவெல்லாம் மற்றவர்களுக்கே என்ற எண்ணமும் தோன்றிடின் பொறியடக்கம் தானே வந்தமையும், புலனடக்கமும் வந்தமையும். பொறிகள் அடக்கத்திற்குத் திருக்குறள் அற்புதமான ஓர் ஆலோசனை கூறுகிறது. ஆமையை உதாரணமாக வைத்துக் கூறுகிறது.

ஆமை, தனக்கு நலம் பயக்காத சூழல்களில் தனது உறுப்புகளை உள்ளே இழுத்து ஒடுக்கிக் கொள்ளும். தனது நலனுக்கே ஏற்ற சூழ்நிலையில் தனது உறுப்புக்களை வெளியே நீட்டி அனுபவிக்கும்.

இதுபோல நாமும் நமக்கு நலம் பயக்கக் கூடிய காட்சிகளைக் கண்டு அனுபவிக்கலாம். கேள்விகளை கேட்டு அனுபவிக்கலாம், சுவையானவைகளை உண்டு அனுபவிக்கலாம். நம்முடைய ஆன்ம நலனுக்குப் பயன் தராத செய்திகளில் நம்முடைய பொறிகளை ஈடுபட அனுமதிக்காமல் இழுத்து அப்புறப்படுத்தி விடவேண்டும். ஆமையின் பொறிகளைப் போல் மனிதனின் பொறிகள் ஒடுக்கக்கூடியான அல்ல. பின் என்ன செய்யலாம்? நமது பொறிகளுக்கு நாமே நலம் பயக்கக்கூடிய அனுபவங்களைப் படைத்துக் கொடுக்க வேணும்.

இத்தகு அடக்கமுடைமையைச் சார்ந்த பண்புகள் வாழ்க்கையில் தங்கினால் வாழ்வு அறவாழ்வாக வளரும்.

**- தெய்வேந்திரம் வஜிதா -**
**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

# அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்பதால் தயாசிறி உளறுகிறார்

## திஸ்ஸ குட்டியாராச்சி சாட்டை



அரசை விமர்சிக்கும் பங்காளிக்கட்சித் தலைவர்கள் உடனடியாக அமைச்சுப் பதவிகளைத் துறக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் -

அரச கூட்டணியிலுள்ள பங்காளிக்கட்சித் தலைவர்கள் அமைச்சு பதவி உட்பட அனைத்து சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் அனுபவிக்கின்றனர். ஆனாலும் அரசை விமர்சிக்கின்றனர். இவர்கள் தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்பதால் தயாசிறி ஜயசேகர உளறுகிறார். தனக்கு அமைச்சு பதவி கிடைக் கவில்லை என திஸ்ஸ வித்தாரண வெளிப்படையாகவே கவலை வெளியிட்டுள்ளார்.

விமல் வீரவன்ஸ, கம்மன்பில போன்றவர்களும் இப்படிதான். தனிப்பட்ட தேவைகளுக்காகவே அவர்கள் அரசை விமர்சிக்கின்றனர்.

விமர்சிப்பதாக இருந்தால் வெளியே சென்று விமர்சிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இவ்வாறானவர்களை எமது கட்சித் தலைவர்கள் வெளியேற்ற வேண்டும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கினிகத்தேனை - பகதொழுவ பகுதியில் விபத்து; ஒருவர் சாவு!



கினிகத்தேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கினிகத்தேனை கண்டி பிரதான வீதியில் கினிகத்தேனை பகதொழுவ பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) இ.போ.சவுக்குச் சொந்தமான பழுது பார்க்கும் பஸ் ஒன்றும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், இருவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பகுதியிலிருந்து ஹற்றன் பகுதியை நோக்கி சென்ற கனரக வாகனம் ஒன்றும் ஹற்றன் பகுதியில் இருந்து நாவலப்பிட்டி பகுதிக்கு சென்ற இ.போ.சவுக்குச் சொந்தமான பழுது பார்க்கும் (பிரேக் டவுன்) பஸ் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் கனரக வாகனத்தின் சாரதி உயிரிழந்துள்ளதோடு, பஸ் சாரதியும், உதவியாளரும் காயமடைந்து நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து காரணமாக சுமார் 30 நிமிடங்கள் கினிகத்தேனை - கண்டி வீதி ஊடான போக்குவரத்துக்கள் பாதிப்புக்குள்ளாகின.

குறித்த கனரக வாகன சாரதிக்கு வேகத்தை கட்டுப்படுத்த முடியாது போனதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளன.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.இந்துக்கல்லூரி மைதான திறப்பு விழா இன்று



நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் விளையாட்டுத் திடல் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பிரித்தானியக் கிளையின் பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட விளையாட்டுத்திடல் தொடர்பில் ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் கடந்த புதன் மாலை இடம்பெற்றது.

இதன்போது திறப்பு விழா பற்றிய விடயங்களும் மைதானத்தில் உள்ள விசேட அம்சங்களும் தெளிவுபடுத்தப்பட்டன. இலத்திரனியல் ஸ்கோர்போட், விளையாட்டு வீரர்க ளுக்கான அறைகள், பயிற்சிகளுக்கான இடம், மைதான பராமரிப்பு போன்ற வசதிகளுடன் 5 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் இந்த நவீன விளையாட்டு திடல் உருவாக் கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டுத்திடல் வடக்கு மாகா ணத்தில் உள்ள பாடசாலைகளிலேயே மிகவும் நவீனகர மான ஒரு மைதானமாக இருக்குமென எதிர்பார்க்கப்படு கிறது. புதிய மைதானத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற் றும் கொழும்பு றோயல் கல்லூரி மோதும் 19 வயதிற் குட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

## கீதாஞ்சலி அமரசூரிய விசாகா நினைவு நூலகம் பிரதமரினால் நேற்று திறந்துவைக்கப்பட்டது



நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நான்கு மாடிகளைக் கொண்ட கீதாஞ்சலி அமரசூரிய விசாகா நினைவு நூலகம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று(வியாழக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

விசாகா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் கல்வி அமைச்சு இணைந்து 9.65 கோடி ரூபா நிதி பங்களிப்புடன் இந்த நூலகத்தை நிர்மாணித்துள்ளது.

விசாகா கல்லூரியின் அதிபர் திருமதி சந்தமாலி அவிருப்பொல, கல்லூரி மாணவிகள் திறப்பு விழாவில் கலந்து கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்களை வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து நூலகத் திறப்பு விழாவை குறிக்கும் வகையில் பிரதமரால் நினைவுப் பலகை திறந்து வைக்கப்பட்டது.

நூலகத்தை திறந்துவைத்து முதலாவது மாடிக்கு சென்ற பிரதமர் நூலக செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்து விசாகா மாணவி ஒருவருக்கு புத்தகமொன்றை வழங்கிவைத்தார்.

விசாகா கல்லூரியின் அதிபரால் இதன்போது பிரதமருக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கிவைக்கப்பட்டது.

1967ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி திறக்கப்பட்ட கீதாஞ்சலி அமரசூரிய நினைவு நூலகம், தற்போது 15 ஆயிரம் சதுர அடி பரப்பளவைக் கொண்ட நிலப்பரப்பில் நான்கு மாடிகளைக் கொண்டதாக அமைக் கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நோய்க்கு மத்தியில் பல்வேறு சிரமங்களை கடந்து பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் கல்வி அமைச்சு இணைந்து இப்புதிய நூலகத்தை விசாகா மாணவிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், தேசிய பாடசாலை பணிப்பாளர் கித்சிறி லியனகமகே, விசாகா கல்லூரியின் அதிபர் திருமதி சந்தமாலி அவிருப்பொல, விசாகா கல்லூரியின் துணை அதிபர்கள் உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# மாணவர் கொத்தணி உருவாகும் அபாயம்!

கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை உயர்வடைகின்றது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் உப தலைவர் எஸ்.ஏ. யூ.ரி. குலதிலக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் டிசெம்பர் மாத மாகும்போது நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ‘யாழ். எம்.ஜி.ஆர்.’ காலமானார்!



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

‘யாழ்.எம்.ஜி.ஆர்.’ என அழைக்கப்படும் கோப்பாய் இராசையா சுந்தரலிங்கம் நேற்று உயிரிழந்துள்ளார்.

கோப்பாய், தெற்கு மாதா கோவிலடியைச் சேர்ந்த இராசையா சுந்தரலிங்கம் (வயது 79) தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.இராமசந்திரனின் தீவிர ரசிகனாவார்.

அத்துடன் அ.தி.மு.கவின் தீவிர விசுவாசியும் ஆவார். தமிழகம் சென்று எம். ஜி.ஆரை நேரில் சந்தித்தும் உள்ளார்.

எம்.ஜி.ஆர். போன்று கறுத்தக் கண்ணாடி அணிந்து தோளில் சால்வையுடன் சைக்கிளில் வலம் வரும் இவரைப் பலரும் ‘யாழ். எம்.ஜி.ஆர்.’ என அழைப்பார்கள். அதனால் அவரின் இயற்பெயர் பலருக்கும் தெரியாது.

எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகனாக மட் டும் அவர் இருக்கவில்லை. சமூகத் தொண்டனாகவும், வறியவர்களுக்கு உதவி செய்பவராகவும் காணப்பட் டுள்ளார்.

எம்.ஜி.ஆரின் பிறந்த தினம், நினைவு நாள்களில் தன்னால் முடிந்தளவுக்குத் தனது சொந்த நிதியில், வறியவர்களுக்கு உதவிகளை செய்வார்.

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டு சந்தைப் பகுதியில் எம்.ஜி. ஆருக்குத் தனது சொந்தப் பணத்தில் சிலையும் வைத்துள்ளார்.

எம்.ஜி.இராமச்சந்திரனின் நினைவு நாள் மற்றும் பிறந்தநாளுக்குத் தீபங்கள் ஏற்றி எம்.ஜி. ஆருக்கு மாலை அணிவித்து வருடந்தோறும் அஞ்சலி செலுத்தி வருபவர்.

இதேவேளை, இராசையா சுந்தரலிங்கத்தின் இறுதிக்கிரியைகள் நேற்று கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில்நடைபெற்றன.

# மக்கள் நடமாடும் வீதி மண் வீதி; யானை நடமாடும் வீதி காபெற் வீதி

## செட்டிகுளத்தில் ஆர்ப்பாட்டம்



**(வவுனியா நிருபர்)**

அரசால் முன்னெடுக்கப் பட்டுள்ள ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டத்தில் சரியான தெரிவுகள் இடம்பெறவில்லை எனத் தெரிவித்து செட்டிகுளம் பிரதேச சபை முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ‘மக்கள் பிரதிநிதியே அநீதிக்குத் துணை போகாதே, வீடுகளுக்கு மண் வீதி காடுகளுக்கு காபெற் வீதியா, மக்களின் தேவைகளை அறியாதவர் வட்டார பிரதிநிதி பதவியில் இருந்து விலகு, மக்களுக்கு மண் வீதி யானைகளுக்கு காப்பெற் வீதி’ என எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (சிறி ரெலோ) பிரதேச சபை உறுப்பினர் யூட் கருத்துத் தெரிவித்தபோது,

செட்டிகுளம் பிரதேசத்துக்குள் இடம் பெற்று வரும் அநியாயங்களால் எமது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். இதனைத் தட்டிக் கேட்கின்ற அதிகாரத்தைக் கொண்டிருக்கும் தவிசாளர் கண்மூடித்தனமாக இருக்கின்றமையிட்டு மனவேதனையடைகின்றோம்.

குறிப்பாக ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் பிழையான தெரிவுகள் இடம்பெற்றுள் என. மக்கள் குடியிருக்காத, காடுகள் வயல்களுக்கு செல்கின்ற வீதிகளை திருத்தப் பணிகளுக்காகத் தெரிவு செய்திருக்கின்றார்கள்.

ஒரு குடும்பம், இரு குடும்பம் இருக்கின்ற வீதிகளையும் தெரிவு செய்திருக்கின்றார்கள். அந்த வீதிகளை மாற்றி பொதுமக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தும் இதுவரை உரிய பதில் தவிசாளரால் வழங்கப்படவில்லை.

எனவே, அந்த வீதிகளுக்குப் பதிலாக மக்களால் கோரிக்கை விடுக்கப்படும் வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் – என்றார். (100)

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# கரைச்சி ‘பட்ஜட்’ நிறைவேற்றம்

**(ந.லோகதயாளன்)**

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

2018ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

இந்நிலையில், 4 வரவு - செலவுத் திட்டங்கள் 4 ஆண்டுகளாகச் சமர்ப்பிக்கப்பட்டு வெற்றியீட்டப்பட்டுள்ளன

2019ஆம் ஆண்டு 4.9 கோடி ரூபா மூலதன வேலைத் திட்டத்தையும், 2020ஆம் ஆண்டு 7.5 கோடி மூலதன வேலைத் திட்டத்தையும், 2021ஆம் ஆண்டு 9 கோடி ரூபா மூலதன வேலைத் திட்டத்தையும் முன்வைத்து வரவு - செலவுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 19 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 927 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 19 மரணங்களில் 08 பெண்களும், 11 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 20 ஆவது திருத்தச் சட்டத்தால்

# ஜனநாயகம் இங்கு இல்லாதொழிப்பு!

## கரு ஜயசூரிய சீற்றம்



**இலங்கையில் அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தால் ஜனநாயகம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றமும் தபாலகமாக மாற்றப்பட்டுள்ளது. – இவ்வாறு சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தால் எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலம் இருந்தும்கூட 20ஐ வைத்துக்கொண்டு பொருள்களின் விலையைக்கூட கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைமையே காணப்படுகின்றது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவராமல் இருந்திருக் கலாம் என்பதே எனது கருத்து. அதன் மூலம் ஜனநாயகம் இன்று இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

20ஆல் நாடாளுமன்றம் தபாலகம் போல் உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல் அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டமும் முழுமையானது என நான் கூறமாட்டேன். எனினும், அதன் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய பயங்கரமான அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அரசமைப்பு பேரவை அமைக்கப்பட்டு, உயர் பதவிகளுக்கான நியமனங்கள் உரிய வகையில் இடம்பெற்றன – என்றார்.